1

## சிறப்பு வரைபடம் 1.8
## சுற்றுலாத் துறையிடமிருந்தான இலங்கையின் வருவாய்கள்

### சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளின் வருகைகள்




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

### நாளொன்றிற்கான சராசரிச் செலவு




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

### சராசரி தங்கும் காலம்




*மூலம்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் உள்நாட்டு பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைப் பதிவுசெய்தன. 2025ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2018ஆம் ஆண்டின் ஏறத்தாழ அதேயளவை அடைந்திருந்த போதிலும், 2018இல் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்தபட்ச சுற்றுலா வருவாய் மட்டத்துடன் ஒப்பிடுகையில், சுற்றுலாத் துறையிடமிருந்தான வருவாய்கள் குறைந்தளவாகக் காணப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025ஆம் ஆண்டில் இலங்கை சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கமைவாக, சுற்றுலாப் பயணியொருவரின் சராசரி தங்கும் காலம் மற்றும் நளொன்றுக்கான[1] சராசரிச் செலவினம் போன்றவற்றில் ஏற்பட்ட கீழ்நோக்கிய திருத்தம், சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் வருவாய்களுக்கிடையிலான வேறுபாட்டிற்கு பாரியளவில் பங்களித்திருக்கலாம். அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கையாள்வதிலுள்ள இயலளவுத் தடைகளுக்கு மத்தியில், நீண்டகால அடிப்படையில் சுற்றுலாத் துறை வருவாய்களை அதிகரிப்பதற்கு இலங்கைக்கு உயர்ந்தளவிலான வருவாயை ஈட்டித்தரும் சுற்றுலாப் பயணிகளை கவருவது இன்றியமையாததாகும். இது தொடர்பில், அதிகளவில் செலவு செய்யும் பயணிகளை கவரும் சூழலுக்கு இசைவான சுற்றுலாத் துறை, சுகாதாரம் சார்ந்த சுற்றுலாத் துறை மற்றும் நல்வாழ்வு அனுபவங்கள் போன்ற மரபுரீதியற்ற துறைகளில் பன்முகப்படுத்தலை மேற்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

1 இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நடாத்தப்பட்ட புறப்பாடு அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுலாப் பயணியொருவரின் நாளொன்றுக்கான சராசரிச் செலவினம் ஐ.அ.டொலர் 171.74 இலிருந்து (2025 சனவரி - யூலை) ஐ.அ.டொலர் 148.26 இற்கு 2025 ஓகத்தில் கீழ்நோக்கி திருத்தப்பட்டுள்ளது.